**MCOP.No.77/2021 P.W.1-வெங்கடேசன் 17.09.2025**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்த நபர் எனது மகன் கோபிநாத் ஆவார். விபத்து சமயத்தில் என் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. என் மகன் ஓட்டி சென்ற இருசக்கரம் லாரியின் பின்பக்கத்தில் மோதி விபத்து நடந்தது என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனம் என் மகனுடையதல்ல. வேறொரு நபருடையதாகும். என் மகனுக்கு தலையில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக தான் அவரது இறப்பு ஏற்பட்டது என்றால் சரிதான். என் மனுவிலோ, புகாரிலோ அல்லது முதல் விசாரணை வாக்குமூலத்திலோ விபத்து சமயத்தில் என் மகன் தலைகவசம் அணிந்திருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். என் மகனுக்கு விபத்து சமயத்தில் 25 வயதிருக்கும். மேற்படி லாரியின் பின்னால் இருசக்கர வாகனம் மோதிய இடம் சாலையின் வலதுபுற ஓரம் என்றால் சரிதான். சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதியதாக எனது முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ளது. நின்றுக்கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதியதாக எனது முதல் விசாரணை சாட்சியத்தில் இருந்தால் அது தவறு. என் மகன் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து கட்டுப்பாட்டை இழந்து சாலையின் வலது புறத்தில் நின்றுக்கொண்டிருந்த லாரியின் மீது தானாகவே மோதி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. என் மகன் அவர் ஓட்டி சென்ற வாகனத்திற்கும், முன்னே சென்ற வாகனத்திற்கும் குறைந்தபட்சம் இடைவெளி விட்டு ஓட்டியிருந்தால் இந்த விபத்தை தடுத்திருக்கலாம் என்றால் சரிதான். இந்த விபத்து சமயத்தில் என் மகன் வேலையில் இருந்தார். விபத்து தேதியில் என் மகனின் வருமானத்தை காட்டக்கூடிய வங்கி ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். ம.சா.ஆ.15-ல் இணைக்கப்பட்டுள்ள ஆவணமானது இந்த மனுவிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.15-ன் படி என் மகனுக்கு மாத, மாதம் சம்பளம் வந்தது என்பதை காண்பிக்க வேறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் விபத்து சமயத்தில் எந்தவிதமான வேலையும் செய்யவில்லை என்றும், அவ்வாறு வேலை செய்திருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த விபத்து முழுக்க, முழுக்க என் மகனின் அஜாக்கிரதையால் ஏற்பட்டதால் 2ம்

எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை